**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 86/2019**

**வா.சா.1 (வீராயி) 05.09.2024**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

மானாமதுரை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண் 649/1989 வழக்கினை பற்றி தெரிந்திருந்தும் நான் வழக்கிற்காக மேற்படி வழக்கு பற்றி தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் மீது சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 139/1996 ல் வழக்கு நடைபெற்று தீர்ப்பு ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியாது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கு பற்றியும் எனக்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மேல்முறையீட்டு வழக்கின் மீது இரண்டாவது மேல்முறையீடு எண் 1492/1997 நடைபெற்று தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அனைத்து வழக்குகளிலும் நான் ஒரு தரப்பினராக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே 11.03.1977 அன்று பாகவிஸ்தி ஏற்பட்டு அதன்படி தாவா சொத்துக்களை அவரவர் பெயரில் தனியாக பட்டா ஏற்பட்டு தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்கள் 60/12பி, 175/8ஏ, 20/1சி, 70/5பி, 73/12ஏ1, 81/8, 97/5பி ஆகிய சொத்துக்கள் பட்டா எண் 111 ல் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு அவர் தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி பாக விஸ்தி விபரம், தனிபட்டா ஏற்பட்ட விபரம், மேற்படி வழக்குகளின் விபரம் நன்கு தெரிந்திருந்தும் அதை மறைத்து பொய்யாக பிராது தாக்கல் செய்துள்ளேன்

**என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எனக்கு இல்லை. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**